Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 80 / 2022

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | பூபாலன் | Calling: | ரியல் எஸ்டேட் |
| Father's / Husband's Name: | கோவிந்தராஜ் | Religion: | |
| Village: | அம்பூர் பேட்டை | Age: | 41 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 18.06.2025

(எதிரி ஆஜர்)

பு.த.சா. 1 மனுவின் பேரில் அழைத்து குறுக்கு விசாரணை

நான் வட்டி தொழில் ஏதேனும் செய்கிறேனா என்றால் இல்லை. புகார்தாரரை தவிர்த்து எத்தனை நபரிடம் பணம் கொடுக்கல் வாங்கல் வைத்துள்ளேன் என்றால் இவரை தவிர்த்து வேறு யாரிடமும் இல்லை. பொதுவாக எதிரி பணம் வாங்கி கொண்டு திரும்ப தராதபட்சத்தில் எதிரியோ அல்லது அவரது குடும்பத்தாருக்கோ பணம் கடன் கேட்டால் கொடுப்பிற்களா என்றால் கொடுக்கமாட்டேன். எதிரி என்னிடம் என்று எவ்வளவு பணம் கேட்டார் என்றால் 15.05.2021 ல் ரூபாய் 3,00,000 கேட்டார். நான் அதை எப்போது கொடுத்தேன் என்றால் 30.05.2021. நான் இந்த வழக்கை எப்போது தாக்கல் செய்தேன் என்றால் தேதி, மாதம் நினைவில்லை 2022 ஆம் ஆண்டு தாக்கல் செய்தேன். 2022 க்கு பின் எதிரியோ அவரது கணவரோ எதிரியின் மாமனாரோ என்னிடம் எவ்வித பணமும் கடனாக கேட்கவில்லை. நானும் அவர்களுக்கு கடனாக பணம் எதையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி பெற்ற கடனுக்கு ஆதரவாக எதிரியும் அவரது கணவர்,

மாமனார் ஆகியோர் கடனுக்கு ஆதரவாக காசோலை மற்றும் புரோ நோட் ஏதேனும் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். எதிரி பெற்ற கடனுக்காக எதிரியின் கணவரின் காசோலை, மாமனாரின் புரோ நோட் ஆகியவற்றை இவ்வழக்கில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எதிரியின் கணவரின் காசோலை மற்றும் மாமனாரின் புரோநோட் ஆகியவற்றின் மீது பணம் வசூலிப்பதற்காக வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவரது கணவர் ஸ்ரீதர் மீது தாக்கல் செய்துள்ளேன். ஒரு பரிகாரத்திற்காக இருவழக்குகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது வேறு பரிகாரம், இது வேறு பரிகாரம். எதிரியின் மாமனார் எவ்வளவு கடன் வாங்கினார் என்றால் எனக்கு நினைவில்லை. எதிரியின் மாமனார் என்னிடம் ரூபாய் 5,00,000 10.01.2021 ஆம் தேதி புரோ நோட்டின் அடிப்படையில் கடனாக வாங்கியதாகவும் அதை திருப்பி தராததால் திருப்பத்தூர் கோடை விடுமுறை நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 91/2024 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். எதிரியின் கணவர் ஸ்ரீதர் புரோ நோட்டின் அடிப்படையிலும் காசோலையின் பேரிலும் 20.06.2022 ம் தேதி 4,00,000 கடனாக பெற்று திரும்ப தராதனால் அவர் மீதும் இக்கணம் நீதிமன்றத்தில் சி.எம்.பி 4909/2025 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் எந்த விதமான கடனும் வாங்கவில்லை என்றாலும், இந்த வழக்கு காசோலை பூர்த்தி செய்து கையொப்பம் இடப்பட்டு கடனுக்காக எதிரி என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் கணவர் ஸ்ரீதர் என்னிடம் வாங்கி செலுத்திய கடனுக்காக பிணையமாக பூர்த்தி செய்யபடாமல் கொடுத்த வழக்கு காசோலையையும், எதிரியின் கணவரின் ICICI வங்கியின் பூர்த்தி செய்யாத காசோலை எண் 024711 மற்றும் எதிரியின் மாமனார் கோபி என்பவரின் புரோ நோட்டைக்கொண்டு அவர்கள் மீது பணத்தை வசூலிக்கும் பொருட்டு அவர் அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரியின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல. ஒரு பரிகாரத்திற்காக இந்த எதிரியின் குடும்பத்தார் மீது பல வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்

(ஒம்.) பூபாலன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K